<u>முதன்மை சார்பு நீதிமன்றம் – திருச்செங்கோடு</u>
முன்னிலை: திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.. பி.எல்.,
முதன்மை சார்பு நீதிபதி, திருச்செங்கோடு
2026–ம் ஆண்டு ஜூன் திங்கள் 24–ம் நாள் புதன்கிழமை
<u>அசல் வழக்கு எண்.91/2022</u>
<u>(CNR No.TNNM-06-000308-2022</u>

1) கவிதா

2) செல்வி

3) மகாலட்சுமி ... வாதிகள்

/எதிராக/

01.அங்கப்பன் (எ) மோகன்

02. பூங்கொடி

03. இளவரசன்

04. சுதா (எ) சுதா மலர் ... பிரதிவாதிகள்

*(Amended as per order in IA No.03/2025, dt.05-08-2025)

இவ்வழக்கு என் முன்னர் கடந்த 12-06-2026-ம் தேதி அன்று இறுதியான விசாரணைக்கு கொண்டுவரப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.B.அர்த்தனாரி, அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் திருமதி.R,பாரதி, அவர்கள் முன்னிலையாகியும் மற்றும் இருதரப்பிலும் முன்னிடப்பட்ட சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கிடும்.

<u>தீ ர் ப் பு ரை</u>

இத்தாவாவானது, தாவா சொத்தினை ஏழு சம பாகங்களாக பிரிவினை செய்து அதில் மூன்று பாகத்தை வாதிகளுக்கு ஒதுக்கி தனிசுவாதீனம் வழங்கியும் நீதிமன்றம் குறிப்பிட்ட காலத்திற்குள் வாதிகளிடம் ஒப்படைக்க பிரதிவாதிகளுக்கு உத்தரவு பிறப்பித்து முதல்நிலை தீர்ப்பாணை பிறப்பித்தும் மற்றும் முதல்நிலை தீர்ப்பாணையின்படி தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்க பிரதிவாதிகள் தவறும்பட்சத்தில் நீதிமன்ற ஆணையர் ஒருவரை நியமனம் செய்து தாவா சொத்தை நலந்திகடு கலந்து ஏழு சமபாகங்களாக பிரிவினை செய்து அதில் மூன்று பாகத்தை தனிப்பட்ட சுவாதீனத்துடன் வாதிகளுக்கு ஒதுக்கி இறுதிநிலை தீர்ப்பாணை பிறப்பிக்க கோரியும், மற்றும் வாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி (எ)

பாலசுப்பிரமணியம் கடந்த 04–06–2018–ம் தேதியன்று 1–ம் பிரதிவாதிக்கு குமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 2946/2018–ஆக எழுதிக் கொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரமும், 3–ம் பிரதிவாதிக்கு குமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2945/2018–ஆக எழுதிக் கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் செல்லாது என விளம்புகை செய்தும், மற்றும் தாவா செலவு தொகை கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>வாதிகள் தரப்பு திருத்தப்பட்ட வழக்குரையின் சுருக்கம்–</u>

(i) தாவா சொத்து ஆதியில் வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி மற்றும் வாதிகள் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி கடந்த 29–08–1979–ம் தேதிய கிரையப் பத்திரத்தின்படி கிரையம் பெற்று அனுபவத்திலும், சுவாதீனத்திலும் இருந்து வந்த நிலையில் வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி தாவா சொத்தினை பராமரிக்கவும், நிர்வகிக்கவும் கட்டிடம் கட்டவும் 23–09–1982–ம் தேதியன்று தாவா சொத்தினை பொறுத்து வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு ஆதரவாக பாகபாத்திய விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்தார். பின்னிட்டு தாவா சொத்தில் வீடு கட்டி வாதிகளும், வாதிகளின் பெற்றோர்கள் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி மற்றும் விஜயா (எ) விஜயலட்சுமி ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தனர்.

(ii) வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி, வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி உயிருடன் உள்ள போதே வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமிக்கு தெரியாமல் வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி, திலகா என்பவரை சட்டத்திற்கு புறம்பாக சேர்த்துக் கொண்டார். மேற்படி திலகாவிற்கு பிறந்தவர்களே பிரதிவாதிகளாவார்கள். வாதிகளின் திருமணத்தை வாதிகளின் தகப்பனார் எவ்வித சீர்வரிசையும் செய்யாமல் மிகவும் எளிமையான முறையில் திருமணம் செய்து வைத்தார். வாதிகளின் தகப்பனார் வாதிகளுக்கு திருமணம் செய்து வைத்த பின்பு தாவாச் சொத்தில் விசைத்தறி அமைத்தார். மேற்படி விசைத்தறியை அனைவரும் கூட்டாக அனுபவித்து அதன்மூலம் கிடைக்கக் கூடிய வருவாயை பகிர்ந்து கொண்டு வந்தனர். இந்நிலையில் வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி கடந்த 10–02–2005–ம் தேதியன்று வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார். பின்னிட்டு தாவாச் சொத்தை வாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர் கூட்டாக அனுபவித்து வந்தனர். இந்நிலையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி கடந்த 23–12–2020–ம்

தேதியன்று தாவாச் சொத்து குறித்து எவ்வித ஆவணமும் எழுதி வைக்காமல் காலமாகிவிட்டார்.

(iii) சின்னதம்பி (எ) பாலசுப்பரமணியத்திற்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வாரிசுதாரர்கள் ஆவார்கள். தாவாச் சொத்து வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்ட தனிச் சொத்தாகும். சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணி காலமான பிறகு தாவாச் சொத்தினை வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டாக அனுபவித்து வந்தனர். வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணியம் கடந்த 04-06-2018-ம் தேதியன்று தாவாச் சொத்து குறித்து 1, 3 பிரதிவாதிகளுக்கு ஏற்படுத்திய தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்திய விவரம் வாதிகளுக்கு கடந்த 26-07-2022-ம் தேதியன்றுதான் தெரிய வந்தது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது வாதிகளை கட்டுப்படுத்தாது. மேலும், மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் ஒரு போதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை. வாதிகளைப் பொறுத்து மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என விளம்புகை செய்ய வேண்டிய ஒன்றாகும்.

(iv) வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னதம்பி (எ) பாலசுப்பிரமணியம் இறந்தபிறகு தாவாச் சொத்தினை கூட்டாக அனுபவித்து வருவதில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு அடிக்கடி சச்சரவு ஏற்பட்டு அதனால் வாதிகள் கடந்த 30-01-2022-ம் தேதியன்று உள்ளூர் பஞ்சாயத்தார்கள் மூலம் பிரதிவாதிகளிடம் நேரில் அணுகி தாவாச் சொத்தில் 3/7-ல் பாகம் பிரித்து தரக் கோரியதற்கு பிரதிவாதிகள் தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லையென்று கூறி பாகம் பிரித்து தர மறுத்துவிட்டார்கள். இவ்வறிவிப்பின் கீழ் விவரிக்கப்பட்டுள்ள சொத்தில் வாதிகளுக்கு 3/7 பாக உரிமையுள்ளது. வாதிகள் கடந்த 04-02-2022-ம் தேதியன்று தாவாச் சொத்தை பாகப்பிரிவினை செய்து தரக்கோரி வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு அனுப்பிதை பிரதிவாதிகள் கடந்த 05-02-2022-ம் தேதியன்று பெற்றுக் கொண்டனர். பிரதிவாதிகள் மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டு தாவாச் சொத்தை பொறுத்து வாதிகளுக்கு பாகப்பிரிவினை செய்து தர முன்வரவில்லை. மேலும், எவ்வித பதிலறிவிப்பும் அனுப்பவில்லை. பிரதிவாதிகள் பணபலம், ஆள்பலம், அரசியல் செல்வாக்கு மிக்கவர்கள். அதனால்தான் வாதிகள் வேறு வழியின்றி பாகப்பிரிவினை பரிகாரம் கோரி தாவாவை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே, தாவா அனுமதிக்கப்பட வேண்டுமென சொல்லப்பட்டுள்ளது.

3) <u>3–ம் பிரதிவாதிகளின் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 1, 2 மற்றும் 4–ம் பிரதிவாதிகள் தனதாக ஏற்றுக் கொள்ளும் எதிருரையின் சுருக்கம்–</u>

(i) தாவா சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல, தள்ளுபடியாகத்தக்கது. இந்த வழக்கில் இந்த பிரதிவாதி ஒப்புக் கொள்ளும் சங்கதிகள் தவிர மற்றவற்றை வாதிகளே நிரூபணம் செய்யக் கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் வழக்குரை பத்தி 3–ல் கண்டுள்ள சங்கதிகள் மட்டும் உண்மை என்றும் இதர சங்கதிகள் எல்லாம் தவறானது என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் சின்னதம்பி. ஆனால், வாதிகள் தாவாவில் வேண்டுமென்றே பாலசுப்பிரமணியம் என்று சேர்த்துள்ளார்கள். எந்த ஆவணத்திலும் மேற்சொன்ன பெயர் இல்லை. தாவாச் சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரிலும், வாதிகளின் பெயரிலும் கடந்த 29–08–1979–ம் தேதி தாவா சொத்தினை கிரையம் பெற்றார்கள். வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கும், வாதிகளின் தாயாருக்கும் கடந்த 1974–ம் ஆண்டுதான் திருமணம் நடந்து. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார்தான் வேலை செய்து பெற்ற வருமானத்தில் தாவாச் சொத்தினை 29–08–1979–ல் கிரையம் வாங்கும்போது வாதிகளின் தாயார் கிரையம் பெற்றார். அந்த சமயத்தில் வாதிகளின் தாயாருக்கு எந்த ஒரு சுயசம்பாத்தியமோ, அவரது பெற்றோர் வீட்டின் சீதனமோ எதுவும் கிடையாது. வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் தனது மனைவி என்ற நம்பிக்கையின் பெயரிலேயே அவரது பெயரையும் சேர்த்து கூட்டாக கிரையம் பெற்றார். அதன் பின்னிட்டு வாதிகள் பிறந்த பின்பு வாதிகளின் தாயார், வாதிகள் மற்றும் இந்த பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னதம்பியோடு சரியான முறையில் வாழ்க்கை நடத்தவில்லை. இருவருக்குமிடையே நிறைய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டது. வாதிகளின் தாயாரானவர் இந்த பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு நம்பிக்கைக்கு பாத்திரமாக வாழவில்லை. இதனால், வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சமி தனது கணவர் சின்னதம்பிக்கு துரோகம் செய்யும் எண்ணத்தில் உணவில் விஷம் வைத்து கொடுத்துவிட்டு, குழந்தைகளையும் விட்டுவிட்டு வேறு ஒரு நபருடன் சென்றுவிட்டார். அதன்பின்னர் பிரதிவாதிகளின் தகப்பனாரை மருத்துவமனையில் சேர்த்து அவரை காப்பாற்றி வீட்டிற்கு அழைத்து வந்தனர். அதன்பின்னிட்டு காவல் நிலையத்தில் புகார் அளித்ததன் பேரில் வாதிகளின் தாயாரை தேடி கண்டுபிடித்து அழைத்து வந்தனர். அதன்பிறகு அவரது உறவினர்கள் முன்னிலையில் மேலும், தனது மனைவியோடு சேர்ந்து வாழ இயலாது என்ற காரணத்தினாலும், வாதிகளின் தாயார் வேறு ஒருவருடன் வாழ்க்கை நடத்த சென்றுவிட்ட காரணத்தினாலும், பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கடந்த 23–09–1981–ம் தேதி வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்ஜமி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னதம்பிக்கு வாதிகளின் தாயார் அவரது

பாகத்திற்கு பிரதிபலனாக ரூ.500/- பெற்றுக் கொண்டு பாகபாத்திய விடுதலைப்பத்திரம் ஒன்றை எழுதி, அதில் குமாரபாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2023/1981 ஆவணமாக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணம் எழுதிக் கொடுத்த பின்னிட்டு வாதிகளின் தாயார் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பானருடன் சேர்ந்து வாழவுமில்லை, எவ்வித தொடர்பும் இல்லை. வாதிகளின் தகப்பனார் சின்னதம்பியே வாதிகளை பாதுகாத்து வளர்த்து வந்தார். அதன்பின்னிட்டு குழந்தைகளை கவனித்துக் கொள்ள வேண்டுமென்பதற்காகவும், வேலைக்கு சென்ற பிறகு குழந்தைகளை பார்த்துக் கொள்ள யாருமில்லை என்பதாலும் கடந்த 1982-ம் ஆண்டு பிரதிவாதியின் தாயார் திலகா என்பவரை வனவாசி பெருமாள் கோவிலில் உற்றார் உறவினர்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டார். அன்று முதல் வாதிகள், உபய வாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகளின் தாயார் திலகா அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வந்தனர். பின்னிட்டு பிரதிவாதிகள் பிறந்தபின்பு உபய வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி அனைவரையும் ஒன்றாக வளர்த்து வந்தார்.

(ii) 1-ம் வாதியின் திருமணத்தை தகப்பனார் மற்றும் தாயார் இருவரும் சேர்ந்து சீர் வரிசைகள் செய்து நடத்தி வைத்தனர். 2, 3 வாதிகள் யாரிடமும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறி விரும்பியவர்களை திருமணம் செய்து கொண்டனர். வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் 2 மற்றும் 3-ம் வாதிகளை அழைத்து செய்ய வேண்டிய சீர் சிறப்புகள் செய்து வைத்து நல்ல முறையில் வாழ வைத்தார்கள். அதன்பின்னிட்டு பிரதிவாதிகளுக்கும் அவரது தகப்பனார் நல்ல முறையில் திருமணம் செய்து வைத்தார். திருமணத்திற்கு பின்னிட்டு 2, 3 வாதிகள் தனது தாயாரோடு சேர்ந்து கொண்டனர். பின்னிட்டு தாவா சொத்தின் ஒரு பகுதியில் விசைத்தறி அமைத்து பிரதிவாதிகளும், அவரது தகப்பனாரும் கூட்டாக வேலை செய்து வந்தனர். இந்நிலையில் வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி கடந்த 10-02-2005-ம் தேதியில் இறந்துவிட்டார். இறக்கும் வரையில் வாதிகளின் தாயார் வேறு ஒரு நபரோடு வாழ்ந்து வந்தார். இவை அனைத்து வாதிகளுக்கு நன்கு தெரியும்.

(iii) வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி நல்ல உடல்நிலையிலும், மனநிலையிலும் உள்ளபோதே வாதிகள் மற்றும் 2, 4 பிரதிவாதிகளுக்கு தேவையான சீர்வரிசைகள் செய்துவிட்டதால் தனது மகன்களான 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தைப் பொருத்து 04-06-2018-ம் தேதியில் குமாரபாளையம் சார்பதிக ஆவண எண்கள்.2946/2018 மற்றும் 2945/22018-ஆக ஒரு பதிவு செய்யப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி

வைத்தார். அன்று முதல் தாவா சொத்திற்கு வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்யப்பட்டு 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகளின் சுவாதீனத்திலும், அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேலும், நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்து வரி மற்றும் குடிநீர் கட்டணம் முறையாக செலுத்தி வருகின்றனர். பின்னிட்டு உபய வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி கடநத 23-122020-ம் தேதியன்று இந்த பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டார். இறப்பிற்கு பின்னிட்டு வாதிகளை அழைத்து 1, 3 பிரதிவாதிகள் 04-06-2018-ம் தேதியில் தங்களது தகப்பனார் தாவா சொத்தினைப் பொறுத்து எழுதி வைத்த செட்டில்மெண்ட் பத்திரத்தினைப் பற்றி கூறினார். அச்சமயத்தில் வாதிகள் தாவாச் சொத்தில் பங்கு பாத்தியம் எதுவும் கேட்கவில்லை. பின்னிட்டு உபய வாதிகளின் தகப்பனார் இறந்து ஒரு வருடம் கழித்து இந்த 3-ம் பிரதிவாதியிம் வாதிகள் தங்களுக்கு சீர் சிறப்புகளோ, ஏதாவது பணமோ செய்யச் சொல்லி பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கேட்டனர். அதன்பேரில் 3-ம் பிரதிவாதியும், வாதிகளுக்கு கணிசமான ஒரு தொகையை கொடுக்க ஒப்புக் கொண்டார். அதன்பேரில் வாதிகள் இதுநாள் வரையில் அமைதியாக இருந்துவிட்டு தற்பொழுது வேண்டாதவர்கள் தூண்டுதலின்பேரில் சொத்தில் பாகம் உள்ளது என்று கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். 1, 2 பிரதிவாதிகள் பெயரில் உபய வாதிகளின் தகப்பனார் எழுதி வைத்துள்ள 04-06-2018-ம் தேதிய செட்டில்மெண்ட் ஆவணத்தைப் பற்றி ஏற்கனவே தெரிந்து கொண்டே வேண்டுமென்றே இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளனர். வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையோ, பங்குபாத்தியமோ இல்லை. வாதிகள் தாவாவில் கோரியுள்ள பாத்தியம் கிடைக்கக் கூடியதல்ல. தாவாவிற்கு வழக்கு மூலம் இல்லை. வழக்கு மூலம் தவறானது.

4) <u>வாதிகள் தரப்பு வழக்குரை மற்றும் பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரையை அடிப்படையாக கொண்டு இவ்வழக்கில் தீர்வு காண வேண்டி கீழ்கண்ட எழுவினாக்கள் 23-09-2025-ம் தேதியில் இந்நீதிமன்றத்தால் வனையப்பட்டுள்ளன</u>.

1. Whether the plaintiff is entitled for granting partition and separate possession for their common 3/7 shares as prayed for?
2. Whether the plaintiff is entitled for declaring that the settlement deed dated 04-06-2018 in document No.2945/2018 executed by father of Plaintiffs in favour of 3rd Defendant is null an void as prayed for?

3. Whether the plaintiff is entitled for declaring that the settlement deed dated 04-06-2018 in document No.2946/2018 executed by father of Plaintiffs in favour of 1st Defendant is null an void as prayed for?
4. To what other relief is entitled for?

5) வாதி தரப்பில் 3-ம் வாதி மகாலட்சுமி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், ஒரு தனலட்சுமி என்பவர் வா.சா.2-ஆக விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. பிரதிவாதிகள் தரப்பில் 3-ம் பிரதிவாதி இளவரசன் என்பவர் பி.சா.1-ஆக விசாரிக்கப்பட்டு பி.சா.ஆ.1 முதல் பி.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.2-ஆக குப்புசாமி என்பவரும், பி.சா.3-ஆக சரவணன் என்பவரும் விசாரிக்கப்பட்டு ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டவில்லை.

6) <u>தீர்வு - எழுவினாக்கள் 1 முதல் 3</u>

(i) வாதிகள் தரப்பில் தாவா சொத்தை வாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் வாதிகளின் தாயார் விஜயலட்சுமி ஆகியோர்கள் கடந்த 29-08-1979-ம் தேதியிட்ட கிரைய ஆவணத்தின்படி கிரையம் பெற்று சுவாதீன அனுபவத்திலிருந்து வந்ததாகவும், இந்நிலையில், வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி தாவா சொத்தினை பராமரிப்பதற்காகவும், நிர்வாகம் செய்வதற்காகவும், கட்டிடம் கட்டுவதற்காகவும் கடந்த 23-09-1981-ம் தேதியன்று தாவா சொத்தில் வாதிகளின் தாயாரான விஜயா (எ) விஜயலட்சுமி என்பவர் பங்கைப் பொறுத்து வாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு ஆதரவாக பாகபாத்திய விடுதலைப் பத்திரம் எழுதிக் கொடுத்தாகவும், பாலசுப்பரமணியம் மற்றும் விஜயா (எ) விஜயலட்சுமி ஆகியோர்கள் கூட்டாக அனுபவித்து வந்ததாகவும், வாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் என்பவர் வாதிகளின் தாயார் உயிருடன் உள்ளபோதே வாதிகளின் தாயாருக்கு தெரியாமல் திலகா என்பவரை சட்டத்திற்கு புறம்பாக சேர்த்துக் கொண்டு மேற்படி திலகா என்பவருக்கு பிறந்தவர்கள்தான் பிரதிவாதிகள் என்றும், வாதிகளின் திருமணத்தை அவர்களது தகப்பனார் எவ்வித சீர்வரிசையும் செய்யாமல் மிகவும் எளிமையான முறையில் திருமணம் செய்து வைத்ததாகவும், வாதிகளுக்கு திருமணம் செய்து வைத்த பின்பு வாதிகளின் தகப்பனார் தாவா சொத்தில் விசைத்தறி அமைத்து அதில் கிடைக்கும் வருவாயை அனைவரும் பகிர்ந்து கொண்டு வந்ததாகவும், வாதிகளின் தாயார் கடந்த 10-02-2005-ம் தேதியில் வாதிகளை வாரிசாக விட்டுவிட்டு

காலமாகிவிட்டதாகவும், பின்னிட்டு வாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகள் ஆகியோர்கள் தாவா சொத்தில் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும் இந்நிலையில் கடந்த 23-12-2020-ம் தேதியில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் என்பவர் தாவா சொத்துக்கள் குறித்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் காமாகிவிட்டதாகவும் மேற்படி சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் வாரிசுகள் என்றும், மேலும், தாவா சொத்தானது சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும், வாதிகளின் தகப்பனார் காலமான பிறகு வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் கூட்டாக அனுபவம் செய்து வந்ததாகவும், வாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் கடந்த 04-06-2018-ம் தேதியன்று தாவா சொத்து குறித்து 1, 3 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஏற்படுத்திய விவரம் 26-07-2020-ம் தேதியில் தெரிய வந்ததாகவும் மேற்படி தான செட்டில்மெண்ட் பத்திரம் செல்லாது என்றும், அது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தானசெட்டில்மெண்ட் ஆவணமானது ஒருபோதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் இறந்தபிறகு தாவா சொத்தை கூட்டாக அனுபவிப்பதில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு அடிப்படை சச்சரவு ஏற்பட்டு அதனால், கடந்த 30-01-2022-ம் தேதியன்று உள்ளூர் பஞ்சாயத்தார்கள் மூலம் பிரதிவாதிகளை நேரில் அணுகி தாவா சொத்தில் வாதிகளுக்கு பொதுவில் பாத்தியப்பட்ட 3/7 பங்கை பாகம் பிரித்து தரக் கேட்டபோது மறுத்துவிட்டதாகவும், அதனால், கடந்த 04-02-2022-ம் தேதியில் தாவா சொத்தை பாகப்பிரிவினை செய்து கொடுக்க வேண்டி வழக்கறிஞர் மூலமாக அறிவிப்பு அனுப்பியதாகவும் 05-02-2022-ம் தேதியில் பிரதிவாதிகள் மேற்படி அறிவிப்பை பெற்றுக் கொண்ட போதும் தாவா சொத்தில் வாதிகளுக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 3/7 பாகத்தை பிரித்துக் கொடுக்க முன்வராமல் பாகப்பிரிவினை தனிசுவாதீனம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் வாதிகள் தாவாவில் கோரியுள்ள பரிகாரம் வழங்க வேண்டி வாதிடப்பட்டது.

(ii) பிரதிவாதிகள் தரப்பில் வாதிகளின் வழக்குரை பத்தி 3-ல் கண்டுள்ள சங்கதிகள் மட்டும் உண்மை என்றும் இதர சங்கதிகள் எல்லாம் தவறானது என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயர் சின்னத்தம்பி என்றும், ஆனால், அவரது பெயர் பாலசுப்பிரமணியம் என்று வாதிகள் வேண்டுமென்றே தாவாவில் சேர்த்துள்ளதாகவும், எந்த ஆவணங்களிலும் மேற்சொன்ன பெயர் இடம் பெறவில்லை என்றும், தாவா சொத்தை வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் பெயரிலும், வாதிகளின் தாயார் பெயரிலும் கடந்த 29-08-1979-ம் தேதியில் கூட்டாக கிரையம் பெற்றதாகவும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின்

தகப்பனாருக்கும், வாதிகளின் தாயாருக்கும் கடந்த 1974–ம் வருடம் திருமணம் நடந்ததாகவும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார்தான் வேலை செய்து பெற்ற வருமானத்தைக் கொண்டு தாவா சொத்தையும் 29–08–1979–ம் தேதியில் கிரையம் பெற்றதாகவும், அவ்வாறு கிரையம் பெற்றபோது வாதிகளின் தாயார் பெயரையும் சேர்த்து கிரையம் பெற்றதாகவும், அந்த சமயத்தில் வாதிகளின் தாயாருக்கு எந்த ஒரு சுய சம்பாத்தியமோ பெற்றோர் வீட்டு சீதனமோ கிடையாது என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் தனது மனைவியின் பெயரில் இருந்த நம்பிக்கையின் பேரிலேயே அவரது பெயரையும் சேர்த்து கூட்டாக கிரையம் பெற்றதாகவும், பின்னிட்டு வாதிகள் பிறந்த பின்பு வாதிகளின் தாயார் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பியுடன் சரியான முறையில் வாழ்க்கை நடத்தாமல் இருவருக்குமிடையே நிறைய கருத்து வேறுபாடுகள் ஏற்பட்டு வாதிகளின் தாயாரானவர் பிரதிவாதிகளின் தகப்பனாரின் நம்பிக்கைக்கு பாத்திரமாக வாழாமல் அவரது கணவர் சின்னத்தம்பிக்கு துரோகம் செய்யும் எண்ணத்தில் அவருக்கு உணவில் விஷம் வைத்து கொடுத்துவிட்டு குழந்தைகளை விட்டுவிட்டு வேறு ஒரு நபருடன் சென்றுவிட்டதாகவும், அதன்பிறகு பிரதிவாதிகளின் தகப்பனாரை மருத்துவமனையில் சேர்த்து காப்பாற்றி வீட்டிற்கு அழைத்து வந்ததாகவும், பின்னிட்டு காவல் நிலையத்தில் புகார் அளிக்கப்பட்டு வாதிகளின் தாயாரை தேடி அழைத்து வந்ததாகவும், அதன் பின்னிட்டு உறவினர்கள் முன்னிலையில் பிரதிவாதிகளின் தகப்பனார் தனது மனைவியோடு சேர்ந்து வாழ இயலாது என்ற காணத்தினாலும், வாதிகளின் தாயார் வேறு ஒருவருடன் வாழ்க்கை நடத்த சென்றுவிட்ட காரணத்தினாலும், பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் கடந்த 23–09–1981–ம் தேதியன்று வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பிக்கு வாதிகளின் தாயார் அவரது பாகத்திற்கு பிரதிபலனாக சின்னதம்பியிடம் ரூ.500/–ஐ பெற்றுக் கொண்டு பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்து அந்த ஆவணமானது குமாரபாளையம், சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண்.2023/1981 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி ஆவணம் எழுதிக் கொடுத்த பிறகு வாதிகளின் தாயார் சின்னதம்பியுடன் சேர்ந்து வாழவில்லை என்றும், மேலும், அவருக்களுக்கிடையே எவ்வித உறவும் இல்லாததால், வாதிகளை அவரது தகப்பனாரான சின்னத்தம்பியே பாதுகாத்து வளர்த்து வந்ததாகவும், அதன் பின்னிட்டு குழந்தைகளை கவனித்து கொள்ள வேண்டுமென்பதற்காக கடந்த 1982–ம் ஆண்டு பிரதிவாதிகளின் தாயாரான திலகா என்பவரை வனவாசி பெருமாள் கோவிலில் உறவினர்கள் மற்றும் பெரியோர்கள் முன்னிலையில் திருமணம் செய்து கொண்டதாகவும், அதுநாள் முதல் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகளின் தாயார் திலகா அனைவரும் ஒன்றாக வாழ்ந்து வந்ததாகவும், பிரதிவாதிகள்

பிறந்த பிறகு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி அனைவரையும் ஒன்றாக வளர்த்து வந்தார் என்றும், 1–ம் வாதியின் திருமணத்தை சீர் வரிசைகள் செய்து சின்னத்தம்பி நடத்தி வைத்ததாகவும், 2, 3 வாதிகள் யாருக்கும் சொல்லாமல் வீட்டை விட்டு வெளியேறி அவர்கள் விரும்பியவரை திருமணம் செய்து கொண்டதாகவும், அவ்வாறிருந்தபோதும், அவர்களையும் அழைத்து அவர்களுக்கு வேண்டிய சீர்வரிசைகள் செய்து நல்ல முறையில் வாழ வைத்தாகவும், வாதிகள் திருமணம் செய்து கொண்ட பிறகு அவர்களின் தாயாருடன் சேர்ந்து கொண்டதாகவும், பின்னிட்டு பிரதிவாதிகளும் அவர்களது தகப்பனாரும் தாவா சொத்தில் விசைத்தறி அமைத்து கூட்டாக வேலை செய்து வந்ததாகவும், வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி கடந்த 10–02–2005–ம் தேதியில் இறந்துவிட்டதாகவும், அவர் வேறு ஒரு நபருடன் வாழ்ந்த விவரம் வாதிகளுக்கு நன்கு தெரியும் என்றும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் சின்னத்தம்பி நல்ல உடல் நிலையிலும், மன நிலையிலும் உள்ளபோது வாதிகள் மற்றும் 2, 4 பிரதிவாதிகளுக்கு சீர்வரிசை செய்து நல்ல முறையில் திருமணம் செய்து வைத்துவிட்டார் என்பதால், 1 மற்றும் 3–ம் பிரதிவாதிகளுக்கு தாவா சொத்துக்களைப் பொருத்து 04–06–2018–ம் தேதியில் ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்ததாகவும், அந்த ஆவணங்கள் முறையே ஆவண எண்கள்.2946/2018 மற்றும் 2945/2018–ஆக குமாரபாளையம் சார்பதிவக அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், அன்று முதல் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் தாவா சொத்தின் சுவாதீனத்தில் இருந்து வருவாய்துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் செய்யப்பட்டு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் ஆகியவைகள் செலுத்தி வருவதாகவும், வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் 23–12–2020–ம் தேதியில் பிரதிவாதிகளை வாரிசாக விட்டுவிட்டு இறந்துவிட்டதாகவும், பின்னிட்டு வாதிகளையும், 1 மற்றும் 4 பிரதிவாதிகளையும் அழைத்து தங்களது தகப்பனார் தாவா சொத்தினைப் பொறுத்து தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி வைத்த விவரத்தை கூறியதாகவும், அந்த சமயத்தில் வாதிகள் தாவா சொத்தில் பங்கு பாத்தியம் எதுவும் கேட்வில்லை என்றும், அதன்பிறகும் வாதிகள் மற்றும் வாதிகளின் தகப்பனார் இறந்த ஒரு வருடம் கழித்து 1, 3 பிரதிவாதிகளிடம் தங்களுக்கு சீர் சிறப்புகளோ ஏதாவது பணமோ செய்யச் சொல்லி பஞ்சாயத்தார் முன்னிலையில் கேட்டதாகவும், 1, 3 பிரதிவாதிகள், வாதிகளுக்கு ஒரு கணிசமான தொகையை கொடுக்க ஒப்புக் கொண்டதாகவும், அதன்படி வாதிகள் இதுநாள் வரையில் அமைதியாக இருந்துவிட்டு தற்போது வேண்டாதவர்கள் தூண்டுதலின் பேரில் தாவா சொத்தில் பாகம் உள்ளதாக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதாகவும் தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்விதமான பங்கு பாத்திமோ, உரிமையோ இல்லாததால் வாதிகள் கோரியபடி தாவா அனுமதிக்கப்பட வேண்டுமென வாதிடப்பட்டது.

(iii) தாவா சொத்தானது வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி மற்றும் வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி ஆகியோரகளுக்கு 29-08-1979-ம் தேதிய கிரைய பத்திரத்தின்படி பாத்தியம் என்ற விவரமானது வா.சா.ஆ.1 கிரைய ஆவணத்தின் மூலம் தெரிய வருகிறது. வாதிகளின் தகப்பனர் சின்னத்தம்பி மற்றும் வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி ஆகியோர்கள் சொத்துக்களை அனுபவித்து வந்து தாவா சொத்துக்களை பராமரிக்கவும், நிர்வகிக்கவும், கட்டிடம் கட்டுவதற்கும் கடந்த 23-09-1981-ம் தேதியில் வாதிகளின் தாயாரான விஜயா என்பவர் அவரது கணவரான சின்னத்தம்பிக்கு ஆதரவாக வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்து மேற்படி பாகபாத்திய விடுதலைப் பத்திரத்திற்கு ஆதரவாக ரூ.500/- ரொக்கமாக பெற்றுக் கொண்டு வா.சா.ஆ.2 ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளதால், தாவா சொத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பி என்பவருக்கு தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றும், மேற்படி சங்கதிகளை வாதிகள் தாக்கல் செய்துள்ள திருத்தப்பட்ட வழக்குரை பத்தி 7-லேயே தாவா சொத்துக்கள் வாதிகளின தகப்பனார் சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியத்திற்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்துக்கள் என்று ஒப்புக் கொண்டுள்ளதால், தாவா சொத்தானது வாதிகளின் தகப்பனார் சின்னதம்பிக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்பதால், அந்த சொத்தைப் பொருத்து அவரது விருப்பத்திற்கிணங்க யார் பெயருக்கு வேண்டுமானாலும் கிரையம், செட்டில்மெண்ட் ஆவணம் மற்றும் உயில் சாசனம் உள்ளிட்ட ஆவணங்கள் எழுதிக் கொடுக்க உரிமையுடையவர் என்றும், வாதிகளின் தகப்பனார் தாவா சொத்தைப் பொருத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் கடந்த 23-12-2020-ம் தேதியில் வா.சா.ஆ.6 ஆவணப்படி காலமாகிவிட்டபடியால் தாவா சொத்தில் வாதிகளுக்கு பொதுவில் 3/7 பாகம் பாத்தியம் என்றும், வாதிகள், பிரதிவாதிகளை நேரில் அணுகி தங்களுக்கு பாத்தியப்பட்ட பொதுவில் 3/7 பாகம் பிரித்து தரக் கேட்டபோது பிரதிவாதிகள் மறுத்துவிட்டதாகவும், வாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி (எ) பாலசுப்பிரமணியம் கடந்த 04-06-2018-ம் தேதியன்று தாவா சொத்துக்கள் குறித்து 1, 3 பிரதிவாதிகளுக்கு வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவண்டகள்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த விவரம் கடந்த 26-07-2022-ம் தேதியில் தெரிய வந்ததாகவும், மேற்படி செட்டில்மெண்ட் ஆவணமானது வாதிகளை கட்டுப்படுத்தாது என்றும், தானசெட்டில்மெண்ட் ஆவணம் ஒதுபோதும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றும், வாதிகளை பொறுத்து செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என பரிகாரம் கோரப்பட்டுள்ளதால், வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி என்பவர் 1, 3 பிரதிவாதிகள் பெயரில் கடந்த 04-06-2018-ம் தேதியில்

எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள்படியான செட்டில்மெண்ட் ஆவணம் உண்மையானதா? அது நடைமுறைப்படுத்தப்பட்டதா? என்பதை ஆராய்ந்து பார்க்க வேண்டும் என்றும், அந்த வகையில் தாவா சொத்தானது வா.சா.ஆ.1 ஆவணப்படி வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சின்னதம்பியும், வாதிகளின் தாயாரான விஜயா (எ) விஜயலட்சுமி என்பவரும் கூட்டாக கிரையம் பெற்று சுவாதீனம் அடைந்து அனுபவித்து வந்து வாதிகளின் தாயார் விஜயா (எ) விஜயலட்சுமி என்பவர் கடந்த 23-09-1981-ம் தேதியில் தனது கணவரான சின்னதம்பி பெயருக்கு வா.சா.ஆ.2 ஆவணப்படி பாகபாத்திய விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்து அவரது பாக சொத்துக்கு ஈடாக சின்னத்தம்பியிடம் ரூ.500/- ரொக்கமகாக பெற்றுக் கொண்டுள்ளபடியால், வாதி மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பிக்கு தாவா சொத்து முழுவதும் தனிப்பட்ட வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்பதாலேயே அதனடிப்படையில் கடந்த 04-06-2018-ம் தேதியில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பி தனது ஆண் வாரிசுகளான 1 மற்றும் 3-ம் பிரதிவாதிகள் பெயருக்கு முறையே வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆவணங்கள்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்து சொத்தை ஒப்படைத்துவிட்டபடியால், வாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பிக்கு 04-06-2018-ம் தேதிக்கு பிறகு தாவா சொத்தில் எவ்விதமான உரிமையோ, பாத்தியமோ இல்லை என்றும், 04-06-2018-ம் தேதியிட்ட வா.சாஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தை 1, 3 பிரதிவாதிகள் ஏற்றுக் கொண்டு தாவா சொத்தை சுவாதீனம் அடைந்து தங்களது பெயருக்கு வருவாய்துறை ஆவணங்களை பெயர் மாற்றிக் கொண்டு நகராட்சிக்கு செலுத்த வேண்டிய சொத்துவரி, குடிநீர் கட்டணம் செலுத்தி அனுபவித்து வருவதால், தாவா சொத்தானது 1, 3 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட தனிப்பட்ட சொத்து என்றும் அதில் வாதிகளுக்கோ 2, 4 பிரதிவாதிகளுக்கோ எவ்வித பங்கு பாத்தியமோ இல்லை.

(iv) வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி கடந்த 04-06-2018-ம் தேதியில் 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 ஆணங்கள்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்த பிறகு கடந்த 23-12-2020-ல் வா.சா.ஆ.6 ஆவணப்படி சின்னத்தம்பி காலமான பிறகு 1, 3 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை மறுக்கப்படாததாலும், சின்னத்தம்பி உயிருடன் இருந்த காலம்வரை 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணமானது மோசடியாகவோ

அல்லது நிர்பந்தத்தின் பேரிலேயோ எழுதி பெற்றுக் கொள்ளப்பட்ட ஆவணம் என்று தெரிவித்து செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்ய எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் சின்னத்தம்பி காலமான பிறகு அவரால் 1, 3 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக் கொடுத்த வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணங்ளை வாதிகளோ 2, 4 பிரதிவாதிகளோ செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது தங்களை கட்டுப்படுத்தாது என்றும், செட்டில்மெண்ட் ஆவணம் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்ற கூற்றை முன் வைக்க இயலாது என்றும், தாவா செத்தானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாரான சின்னத்தம்பிக்கு தனிப்பட்ட சொத்து என்பதினால் அவர் விருப்பத்தின் பேரிலேயே 1, 3 பிரதிவாதிகளுக்கு வா.சாஆ.13, வா.சா.ஆ.14, பி.சா.ஆ.1 மற்றும் பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணப்படி சொத்துக்களை ஒப்படைத்துவிட்டபடியால், சின்னத்தம்பி என்பவர் தாவா சொத்துக்களைப் பொருத்து எவ்வித விருப்புறுதி ஆவணமும் எழுதி வைக்காமல் இருந்துவிட்டார் என்ற வாதிகளின் கூற்று தவறானதாகும். மேலும், வாதிகளும், பிரதிவாதிகளும் தாவா சொத்தில் கூட்டாக அனுபவித்து வந்து தாவா சொத்தை அனுபவிப்பதில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கிடையே சச்சரவு ஏற்பட்டு வாதிகள் தங்களுக்கு பாத்திப்பட்ட 3/7 பாகத்தினை பிரித்துக் கொடுக்க கேட்டார்கள் என்பதற்கும், தாவா சொத்தை வாதிகள் அனுபவித்து வந்தார்கள் என்பதை காட்டுவதற்கும் எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படவில்லை. வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணப்படி தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு பி.சாஆ.3 முதல் பி.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள்படி தாவா சொத்திற்கு 1, 3 பிரதிவாதிகள் வரி செலுத்தி வருவாய்துறை ஆணங்களை பெயர் மாற்றம் செய்து கொண்டு அனுபவித்து வருவதால், தாவா சொத்தை வாதிகள், பிரதிவாதிகளுடன் அனுபவித்து வந்தார்கள் என்ற கூற்று உண்மையானதல்ல. வாதிகள் சின்னத்தம்பியின் முதல் மனைவியான விஜயா (எ) விஜயலட்சுமி என்பவர் மூலமாகவும், பிரதிவாதிகள் சின்னத்தம்பியின் 2-வது மனைவியான திலகா என்பவர் மூலமாகவும் பிறந்தவர்கள் என்றும், சின்னத்தம்பி என்பவர் தனது முதல் மனைவி உயிருடன் இருக்கும்போதே அவரிடமிருந்து சட்டப்படி விவாகரத்து எதுவும் பெறாமல், திலகா என்பவரை திருமணம் செய்து கொண்டு அதன் மூலம் 1 முதல் 4 பிரதிவாதிகள் பிறந்துள்ளதால் 1 முதல் 4 பிரதிவாதிகள் முறையிலா மணப்பிறப்பு குழந்தைகள் ஆவார்கள். பிரதிவாதிகள் மேற்படி சின்னத்தம்பிக்கும், திலாகாவிற்க்கும் பிறந்த முறையிலா மணப்பிறப்பு குழந்தைகளாக இருந்தபோதும், சின்னத்தம்பி என்பவருக்கு இந்து வாரிசுரிமை சட்டம் பிரிவு 8-ன்படி முதல்நிலை வாரிசுகள் என்றும், தாவா சொத்தைப் பொருத்து சின்னத்தம்பி என்பவர் விருப்புறுதி ஆவணம் எதுவும் எழுதி வைக்காமல் இருக்கும்பட்சத்தில்தான் சின்னத்தம்பி

விட்டுச் சென்ற அசையும் மற்றும் அசையா சொத்துக்களை வாரிசு அடிப்படையில் வாதிகள் மற்றும் பிரதிவாதிகள் பங்கு விகிதாச்சார அடிப்படையில் உரிமை கோர முடியும் என்றும், தாவா சொத்துக்ளைப் பொருத்து சின்னத்தம்பி என்பவர் தனது ஆண் வாரிசுகளான 1 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயருக்கு வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆணங்கள்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக் கொடுத்துவிட்டு அந்த ஆவணமும் நடைமுறைப்படுத்தப்பட்டு சின்னத்தம்பி ஆயுள் காலம்வரை அவரால் எழுதிக் கொடுகப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணங்களை ஆட்சேபிக்கப்படாத நிலையில் தாவா சொத்தைப் பொருத்து சின்னத்தம்பி விருப்புறுதி ஆவணமும் எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் எனவும், வாதிகளுக்கு பொதுவில் 3/7 பாகம் பாத்தியம் என்பதும் தவறாகும். மேலும், வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணமானது வாதிகள் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனார் சின்னத்தம்பி என்பவர் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக் கொடுத்தபோது உடனிருந்து சாட்சி கையெழுத்துபோட்ட சரவணன் என்பவர் பிரதிவாதிகள் தரப்பில் பி.சா.3–ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.13, வா.சா.ஆ.14 மற்றும் பி.சா.ஆ.1, பி.சா.ஆ.2 ஆவணங்கள் சின்னத்தம்பி என்பவரால் 1 மற்றும் 3 பிரதிவாதிகள் பெயருக்கு எழுதிக் கொடுத்த விபரம் நிரூணம் செய்யப்பட்டுள்ளதால், வாதிகள் தாவாவில் கோரியுள்ளவாறு எவ்வித பாரகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல. எனவே, வழக்கெழு வினா–1 வாதிகளுக்கு பாதகமாகவும், வழக்கெழுவினாக்கள்–2, 3 பிரதிவாதிகளுக்கு சாதகமாகவும் தீர்வு காணப்படுகிறது.

7) <u>எழுவினா–4</u>

மேலே விவாதிக்கப்பட்ட சங்கதிகளின் அடிப்படையில் வழக்கெழுவினா–1 வாதிகளுக்கு பாதகமாகவும், வழக்கெழுவினாக்கள் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு சாதகமாகவும் தீர்வு காணப்பட்டு வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு தாவாவில் வாதிகள் கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்வு காணப்பட்டுள்ளதால் பிறபரிகாரம் எதுவும் இல்லை.

முடிவாக, இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இந்த தீர்ப்பு என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு

செய்யப்பட்டு என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு பின்னர் 2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 24-ம் நாள் இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2026.06.24 18:55:45 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

01) <u>வாதிகள் தரப்பு சாட்சிகள்</u>-

1. வா.சா.1 - மகாலட்சுமி

2. வா.சா.2 - தனலட்சுமி

02) <u>வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்-</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | வா.சா.ஆ.1 | 29-08-1979 | வாதியின் தகப்பனார் மற்றும் தாயார் பெரியலுள்ள கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| 2) | வ.சா.ஆ.2 | 23-09-1981 | வாதிகளின் தாயார் வாதிகளின் தகப்பனார் பெயருக்கு எழுதிக் கொடுத்த தாவா விடுதலைப் பாத்திய பத்திரம் சான்றிட்ட நகல் |
| 3) | வா.சா.ஆ.3 | - | வாதிகளின் தாயார் பெயரிலுள்ள குடும்ப அட்டையின் நகல் |
| 4) | வா.சா.ஆ.4 | - | பாலா கேஸ் ஏஜென்ஸி மூலமாக வாதிகளின் தாயார் பெயருக்கு வழங்கப்பட்ட பதிவு சீட்டு நகல் |
| 5) | வா.சா.ஆ.5 | 19-07-2013 | பிரதிவாதிகள் மற்றும் சின்னதம்பி என்ற பாலசுப்பிரமணி ஆகியோர் ஏற்படுத்திக் கொண்ட கிரைய ரத்து பத்திரம் சான்றிட்ட நகல் |
| 6) | வா.சா.ஆ.6 | 21-01-2021 | வாதிகளின் தகப்பனார் சின்னதம்பி என்பவரது இறப்புச் சான்று கணினி நகல் |
| 7) | வா.சா.ஆ.7 | - | வாதிகளின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் சரிபார்க்கப்பட்டது.) |
| 8) | வா.சா.ஆ.8 | 04-02-2022 | வாதிகள், பிரதிவாதிகளுக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அஞ்சல் ரசீதுடன் கூடிய அலுவலக நகல் |
| 9) | வா.சா.ஆ.9 | 05-02-2022 | பிரதிவாதிகள் வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக் கொண்டதற்கான ஒப்புகை அட்டை (4 எண்ணிக்கைகள்) |

| | | | |
|---|---|---|---|
| 10) | வா.சா.ஆ.10 | – | தாவா சொத்திற்கான அரசு வழிகாட்டி மதிப்பு கணினி நகல் |
| 11) | வா.சா.ஆ.11 | 31–01–2022 | தாவா சொத்து தொடர்பான வில்லங்கச் சான்று கணினி நகல் |
| 12) | வா.சா.ஆ.12 | 20–01–2022 | வாதிகளின் தாயார் விஜயலட்சுமி என்பவர் பெயரிலுள்ள இறப்புச் சான்று கணினி நகல் |
| 13) | வா.சா.ஆ.13 | 04–06–2018 | 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் சான்றிட்ட நகல் |
| 14) | வா.சா.ஆ.14 | 04–06–2018 | 1–ம் பிரதிவாதியின் பெயரிலுள்ள தான செட்டில்மெண்ட் பத்திரம் |

03) <u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்–</u>

1. பி.வா.சா.1 – இளவரசன்
2. பி.வா.சா.2 – குப்புசாமி
3. பி.வா.சா.3 – சரவணன்

04) <u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்–</u>

| | | | |
|---|---|---|---|
| 1) | பி.சா.ஆ.1 | 04–06–2018 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் |
| 2) | பி.சா.ஆ.2 | 04–06–2018 | 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணம் சான்றிட்ட நகல் |
| 3) | பி.சா.ஆ.3 | 2021–2022 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதுகள் (4 எண்ணிக்கைகள்) அசல் |
| 4) | பி.சா.ஆ.4 | 2021–2022 | 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டுவரி ரசீதுகள் (4 எண்ணிக்கைகள்) அசல் |
| 5) | பி.சா.ஆ.5 | 2021–2022 | 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள குடிநீர் கட்டண ரசீது அசல் |
| 6) | பி.சா.ஆ.6 | 15–12–2021 | 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள டவுன் சர்வே ரெஜிஸ்டர் கணினி நகல் |
| 7) | பி.சா.ஆ.7 | 15–12–2021 | 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள டவுன் சர்வே ரெஜிஸ்டர் கணினி நகல் |

| | | | |
|---|---|---|---|
| 8) | பி.சா.ஆ.8 | 2025–2026 | வருடத்திற்கான 1–ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (4 எண்ணிக்கைகள்) |
| 9) | பி.சா.ஆ.9 | 2025–2026 | வருடத்திற்கான 3–ம் பிரதிவாதி பெயரிலுள்ள வீட்டு வரி ரசீதுகள் (4 எண்ணிக்கைகள்) |

M RAMACHANDRAN

Digitally signed by M RAMACHANDRAN
Date: 2026.06.24 18:55:34 +0530

முதன்மை சார்பு நீதிபதி,
திருச்செங்கோடு.

அசல்/வரைவு/தீர்ப்புரை
அசல் வழக்கு எண்.91/2022
நாள்.24-06-2026